# கிழக்குப் பல்கலைக்கழகம்

## முதலாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு – (வெளிவாரி) 2004/2005
## (ஒக்டோபர்/நவம்பர்)- 2006

# ECO 101- பொருளியல் கோட்பாடுகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01. அ. பொருளியல் முறைமை என்பதனால் நீர் விளங்குவது யாது ?
(05 புள்ளி)

ஆ. உலகில் வெவ்வேறு வகையான பொருளியல் முறைமைகள் ஏன் ஏற்பட்டன என விபரிக்குக.
(05 புள்ளி)

இ. அருமை, தேர்வு இரண்டிற்குமிடையேயான தொடர்பினை விளக்குக.
(05 புள்ளி)

ஈ. பொருளியலில் உற்பத்திக் காரணிகளில் ஒன்றான "நிலம்" என்பதனால் யாது விளங்குகின்றீர் ?
உற்பத்திக் காரணியான நிலத்தின் முக்கியத்துவம் யாது ?
(05 புள்ளி)

02. அ. உற்பத்திச் சாத்திய வளையியொன்றினை வரையும் போது கைக் கொள்ளப்படும் எடுகோள்களை நிரற்படுத்துக.
(03 புள்ளி)

ஆ. வெவ்வேறு உற்பத்திச் சாத்திய வளையியை பயன்படுத்தி கீழ்வரும் சந்தர்ப்பங்களைக் காட்டுக:
1. பொருளாதார வளர்சி
2. வளங்களின் பூரண தொழிற்பாடு
3. வளங்களின் குறை தொழிற்பாடு
4. வளங்களின் அதிகரித்த உபயோகத்தின் காரணமாக உற்பத்தி அதிகரிப்பு
5. சகல வளங்களினதும் உற்பத்தித் திறனில் அதிகரிப்பு
6. அமையச் செலவின் வீழ்ச்சி
7. அமையச் செலவின் அதிகரிப்பு

(07 புள்ளி)

இ. வரை படமொன்றின் உதவியுடன் சமநிலை விலை என்பதனால் கருதப் படுவதனை விபரிக்குக.
(05 புள்ளி)

ஈ. நீண்ட காலத்தில் சுயாதீன சந்தைப் பொருளாதாரமொன்றின் மிகைக்கேள்வியோ, அன்றேல் மிகை நிரம்பலோ இருக்க முடியாது என்பதற்கான காரணங்களை விபரிக்குக.
(05 புள்ளி)

03. அ. விலைக் கட்டுப்பாடுகளின் பொருளியற் பிரதி பலன்களை விளக்குக.
(05 புள்ளி)

ஆ. கேள்வியின் விலை நெகிழச்சியினையும், வருமான நெகிழச்சியினையும், விளக்குக.
(05 புள்ளி)

இ. கேள்வியின் வருமானத்தாக்கத்தினையும், பிரதியீட்டுத்தாக்கத்தினையும், ஒரு பண்டத்தின் விலை வீழ்ச்சியுறும் போது வேறுபடுத்தி விபரிக்குக.
(05 புள்ளி)

ஈ. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்குக.

| விலை | கேள்வி | நிரம்பல் | மிகைக் கேள்வி | மிகை நிரம்பல் |
|---|---|---|---|---|
| 5 | 30 | 102 | | |
| 4 | 48 | 84 | | |
| 3 | 66 | 66 | | |
| 2 | 84 | 48 | | |
| 1 | 102 | 30 | | |

1. மிகைக் கேள்வி, மிகை நிரம்பல் நிரல்களைப் பூரணப்படுத்துக.
2. சமநிலை விலை, சமநிலைத் தொகையினைக் கனிக்குக.
3. விலை 2/= ஆக இருக்கும் போது, விலைக் கேள்வி நெகிழ்ச்சியினைக் கணிக்குக.

(05 புள்ளி)

04. அ. நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றை விளக்குக.
(05 புள்ளி)

ஆ. நீண்டகால உற்பத்திச் செலவிற்கும், குறுங்கால உற்பத்திச் செலவிற்குமிடையேயான வேறுபாடுகளை விளக்குக.
(05 புள்ளி)

இ. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| வெளியீடு | நிலையான செலவு | மொத்த மாறும் செலவு |
|---|---|---|
| 0 | 100 | ----- |
| 10 | ----- | 20 |
| 20 | ----- | 40 |
| 30 | ----- | 60 |
| 40 | ----- | 80 |
| 50 | ----- | 100 |
| 60 | ----- | 120 |

மொத்தச் செலவு, சராசரி செலவு, சராசரி மாறும் செலவு என்பனவற்றைக் கணித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

(10 புள்ளி)

05. அ. மொத்த தேசிய உற்பத்தி (GDP) என்பதனை விளக்குக.
மொத்த தேசிய உற்பத்தியினைக் கணிக்கும் போது ஒரு பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்க.

(10 புள்ளி)

ஆ. மொத்த தேசிய உற்பத்தியினைக் கணிக்கும் வேறுபட்ட முறைகளை விளக்குக.

(10 புள்ளி)

06. அ. கட்டுப்பாட்டு பொருளாதாரமொன்றில் அரச செயற்பாடுகள் இல்லாமலும், சேமிப்பு = முதலீடு ஆகவும் உள்ளது எனக்கருதுக.
முதலீடு = ரூபா 9000 மில்லியன் ஆகவும், சேமிப்பு தேசிய வருமானத்தின் மூன்றிலொரு பங்காகவும் இருப்பின், நுகர்வுப் பெறுமதி யாது ?

(05 புள்ளி)

ஆ. அரசாங்கத்தின் சகல பெறுவனவுகளையும் அரச வருமானமாகக் கருத முடியுமா என விளக்குக.

(05 புள்ளி)

இ. அரச வரவு செலவுத்திட்டமென்றால் என்னவெனக் கூறுக.

(05 புள்ளி)

ஈ. புற்றாக் குறையுடையு வரவு செலவுத்திட்டமொன்றிற்கு எவ்வாறு நிதியளிப்புச் செய்யப்படும் என்பதனை விளக்குக.

(05 புள்ளி)

07. அ. பணத்தின் பொதுப் பண்புகளைக் கூறுக.

(05 புள்ளி)

ஆ. ஒடுங்கிய பண வழங்கலை விளக்குக.

(05 புள்ளி)

இ. மத்திய வங்கிக்கும், வணிக வங்கிக்கும் இடையேயான வேறுபாடுகளை அவற்றின் தொழிற்பாடுகளின் அடிப்படையில் வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளி)

08. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
அ. இலங்கைப் பொருளாதாரத்தின் இரட்டைத் தன்மை
ஆ. இலங்கைப் பொருளாதாரத்தின் தற்கால மாற்றமும் போக்கும்
இ. குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி
ஈ. எல்லை வருமானம்

(20 புள்ளி)